மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 211. திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

211—

தேங்காய் எண்ணெய்ப் பிழிந்தெடுக்கும் ஆலை அமைத்தல்

***24830**—*திரு. கா. பூ. முனுசாமி :*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் அரசு தேங்காய் எண்ணெய்ப் பிழிந்தெடுக்கும் தொழிற்சாலையை நிறுவிட முன்வருமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

இல்லை.

திரு. கா.பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னம் பயிர் வளர்ச்சியில் இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகம் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. கிட்டத்தட்ட 2.40 லட்சம் ஹெக்டேர் நிலத்தில் இந்தப் பயிர் பயிரிடப்பட்டுள்ளது. இங்கே பயிரடப்பட்டு விளைகின்ற தேங்காய் ஆண்டுக்காண்டு விலை குறைந்து கொண்டே இருக்கின்ற காரணத்தினால், விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பது இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகின்ற ஆண்டுகளில் அங்கே எண்ணெய் பிழியும் தொழிற்சாலை அமைக்க முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபோது தமிழகம் இந்தியாவிலே தென்னை உற்பத்தியிலே மூன்றாவது இடம் என்று சொன்னார்கள். ஒரு திருத்தம், அது இரண்டாவது இடம். முதலிடம் கேரளம் ; இரண்டாவது இடம் நாம். ஆனால், ஒரு ஹெக்டேரினுடைய உற்பத்தித் திறனிலே தமிழகம் முதலிடம். இந்தியாவிலே ஒரு தென்னை யினுடைய சராசரி தேங்காய் விளைச்சல் 47 ; ஆனால் தமிழகத்தில் 57 என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இன்றைக்கு இந்தியாவிலே 9 ஆயிரம் மில்லியன் தேங்காய்கள் உற்பத்தி ஆகின்றன. அதிலே தமிழகத்திலே 2 ஆயிரம் மில்லியன் தேங்காய்கள் விளைவிக்கப்படுகின்றன. இன்றைக்கு இதிலே 95 சதவீதம் தேங்காய்கள் வீட்டு உபயோகத்திற்கும், மத வழிப்பாட்டிற்கும் பயன் படுகின்றன. மீதம் உள்ளவை 5 சதவீதம் மட்டுமே. இதை வைத்து அரசு ஆலை துவக்கும் சாத்தியக்கூறு இல்லை.

1995 ஏப்ரல் 4]

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவிலே தேங்காய் எண்ணெயை உணவுப் பொருளுக்குப் பயன் படுத்தக்கூடிய வகையிலே அங்கே அந்த எண்ணெயை உற்பத்தி செய்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே அதிக பங்கு உணவுப் பொருளுக்கு பயன்படுத்தப்படுகிறது என்று கூறி இருக்கிறார்கள். உணவுப் பொருள்களுக்கு எண்ணெயாக பயன்படுத்தாமல் தேங்காய் ஆகத்தான் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, உணவுப் பொருட்களுக்கு எண்ணெயாக பயன்படுத்துவதற்குரிய வகையில் அதற்குத் தக்கவாறாவது ஒரு தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளநீரைக் கூட இன்றைக்கு பாலிதீன் பையில் அடைத்து மேலை நாடுகளிலே விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். அதேபோன்ற விற்பனை தமிழகத்திலும் வர வேண்டும் என்று நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவுரை வழங்கி இருக்கிறார்கள். அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதைப்போல எரியூட்டப்படும் தேங்காய் ஓடுகளிலிருந்து ஒரு வாயு வெளியேற்றப்படுகிறது. அப்படிக் கிடைக்கக்கூடிய அந்த வாயு இன்றைக்கு அதிகமாக இரசாயன மாற்றங்களுக்குத் தேவைப்படுகிறது. அதை உருவாக்குவதற்கு அரசு முயன்று கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனைப்போல தென்னை உற்பத்தியாளர்களுக்கு அடிப்படை விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்ற நீண்ட நாளைய கோரிக்கை இருக்கிறது. அதைக் கொண்டு வருவதற்கு அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. அர்ச்சுனன்.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அமைச்சர் அவர்கள் இந்த விலை வீழ்ச்சி தேங்காய் உற்பத்தியாளர்களுக்கு அடிக்கடி ஏற்பட்டு விடுவதைத் தடுப்பதற்கு முயற்சி மேற்கொண்டு இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே கேரள அரசாங்கம் இதை பின்பற்றி வருகிற காரணத்தால்தான் அது முதலிடத்தில் இருக்கிறது. தமிழகம் இரண்டாவது இடத்தில் இருக்கிற நிலையில் 'சப்போர்ட்டிங் பிரைஸ்' அரசாங்கத்தின் மூலமாகக் கொண்டு வந்தால் தமிழகமும் தேங்காய் உற்பத்தியில் முதல் இடத்திற்கு வரும். இந்த முயற்சியை எந்த வகையில் கொண்டுவர இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலத்தில் இந்திய தென்னை வளர்ச்சி வாரியம் அங்கே இருக்கிறது. அந்த வாரியம் கேரள மாநிலத்தில் கொச்சியில் இருக்கிற காரணத்தால் அவர்கள் இந்த அடிப்படை விலையை முதன்முதலாக அங்கே நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இந்த விலையை தமிழகத்தில் நிர்ணயம் செய்வதற்கு இந்திய தென்னை வளர்ச்சி வாரியத்தின் ஒத்துழைப்பு நமக்கு தேவை. உதாரணமாக ஒரு விவசாயி தன்னுடைய மகசூலிலிருந்து வரக்கூடிய தேங்காய்களை ஒரு ஆலை அதிபருக்கு விற்று விடுகிறார் என்றால், அவர் அந்த நேரத்தில் பணம் பெறாமல் தனக்கு எப்போது பணம் வேண்டுமென்று விரும்புகிறாரோ, அப்போது அவர் பணம் பெறுகிறபோது, அன்றைக்கு என்ன விலை கொப்பரை விற்கிறதோ அந்த விலையை அவர் பெறுகிறார். ஆனால் இன்றைக்கு தமிழகத்தில் அந்த நிலை இல்லை. எனவே தான், கேரளாவில் இருப்பதைப்போல தமிழகத்திலேயும் தேங்காய்க்கு அரசே அடிப்படை விலையை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கொள்கை அளவில் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இதற்காக தென்னை வளர்ச்சி வாரியத்திடம் பேசியிருக்கிறோம். அவர்களும் இணக்கமான பதிலைத் தந்திருக்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கையை இன்றைக்கு அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் இன்றைக்கு தென்னை உற்பத்தியில் முதல் நிலைக்கு வந்து கொண்டிருப்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தென்னை இளநீர் உடலுக்கு நல்லது என்பதால் இளநீராகப் பருகுவதற்கு மருத்துவர்களும் பரிந்துரை செய்கிறார்கள். ஆனால் அதேநேரத்தில் தேங்காயில் அதிகமாக கொலஸ்ட்ரால் இருக்கிறது என்று சொல்லி ஒரு தவறான பிரச்சாரம் செய்யப்படுவதன் காரணமாக, இயற்கை உணவு என்று கருதப்பட்ட அந்தத் தேங்காயை இப்போது மருத்துவர்கள் பலரால் கொலஸ்ட்ரால் என்று சொல்லப்படுவதால் உண்பது குறைந்து இருக்கிறது. இந்தத் தேங்காயை அதிகமாக உண்ணுகிற கேரள மாநிலத்தில் அவர்களுக்கு ஹார்ட் அட்டாக் போன்ற நோய்கள் வருவதில்லை. எனவே, இந்தத் தேங்காயை உபயோகம் அதிகப்படுத்துவதற்கும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா? அதற்கான உதவியைச் செய்வதற்கு அரசின் சார்பில் ஏதாவது நிறுவனம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளநீர் குடிப்பதற்கேற்ற தரமான நல்ல நீராக மாத்திரம் இல்லாமல், அது உடல் வெப்பத்தைக் குறைக்கப் பயன்படுகிறது. உதாரணமாக, குடல் புழுக்களை அது கொல்கிறது. குடல் புண்களை குணமாக்கப் பயன்படுகிறது. நீர்ச்சுவடு, நீர் கடுப்பு, நீரிழிவு, ஆஸ்த்துமா போன்ற நோய்களையும் அது குணப்படுத்துகிறது. எனவேதான் இளநீரை விற்பனை செய்ய வேண்டிய நிலையில் நாம் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். எனவே தமிழ் நாடு வேளாண் தொழில் கழகத்தின் மூலமாக இந்த முயற்சி விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல இன்னமும் இந்தியாவில்தான் நாம் கிரானுலர் கார்பன் தயாரிப்பில் கவனம் செலுத்தவில்லை. அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு விஞ்ஞானத்தில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டிய இந்த காலக்கட்டத்தில் இருக்கிற காரணத்தால்தான் கிரானுலர் கார்பன் உற்பத்தி செய்யக்கூடிய புதிய முயற்சியில் தமிழ்நாடு வேளாண் தொழில் கழகமும், தென்னை வாரியமும் இணைந்து செயல்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 212, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

212 —

அரவக்குறிச்சித் தொகுதியில் வேளாண்மைத் துறைத் திட்டங்கள்

***77331**—*திருமதி கே. மரியம் உல் ஆசியா :*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், அரவக்குறிச்சித் தொகுதி மிகவும் வறட்சியான பகுதியாக இருப்பதால், வேளாண்மைத் துறையின் மூலம் திட்டங்கள் நிறைவேற அரசு ஆவன செய்யுமா ?

முற்பகல் **10.45**

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். அரவக்குறிச்சி வட்டாரம், **1995-96** ஆம் ஆண்டு முதல் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும். நில, நீர் பராமரிப்பு, காடு